**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 166/2025**

திருமதி.சுதா (D.W –1) **09.02.2026.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 1996 ல் நடந்தது. திருமணத்திற்கு பிறகு என் கணவருடன் கோவையில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். தாவாச்சொத்தில் ஏற்கனவே கட்டிடங்கள் இருந்தது என்றால் சரி. அந்த கட்டிடங்களை கடந்த வருடம் நான் இடித்துவிட்டேன் என்றால் சரி. தாவாச்சொத்தில் இருந்து கட்டிடங்களில் வாதி சுவாதீனத்தில் இருந்தார் அதை நான் இடித்துவிட்டேன் என்றால் தவறு. தாவாச்சொத்தில் ஒரு இட்லி கடை நடந்து வருகிறது என்றால் சரி. ஏற்கனவே என்னுடைய பாட்டி ஏற்படுத்திய மூன்று உயில்களின் எல்லோருக்கும் சரிபாகம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு அந்த விவரங்கள் தெரியும் மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

2012 ஆம் வருடம் என் பாட்டி எழுதியதாக சொல்லும் உயிலில் துரைசாமிக்கு 675 சதுரடிகள், ரவிச்சந்திரனுக்கு 225 சதுரடிகள், ராஜம்மாளுக்கு 300 சதுரடிகள், பாப்பாத்தியம்மாள் மகளுக்கு 300 சதுரடிகள் பிரித்து எழுதி கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் தெரியாது. அப்படித்தான் இருக்கிறது. தாவாவில் தாவாச்சொத்து எனக்கு உயில் முலமாக பாத்தியப்பட்டதாகத்தான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரி. உயில் ஆவணம் 2012 ஆம் வருடம் அவசர கோலத்தில் எங்களால் தயார் செய்யப்பட்டதால்தான் உயில் விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தமிழ் எனக்கு படிக்கத்தெரியுமா என்றால் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 1997 ஆம் வருட உயிலில் என்னுடைய பாட்டி

யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் கொடுத்துள்ளார் என்றால் என்னால் அதை படிக்க முடியவில்லை. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் 2010 ஆம் வருட உயிலில் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. எனக்கு நன்றாக படிக்கத் தெரியும், உயில் சங்கதிகளை படித்தால் என்னுடைய எதிர்வாதம் பொய்யாகவிடும் என்பதால் மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு நல்ல கண்பார்வை உள்ளதா என்றால் உள்ளது. வேண்டுமென்றே ஆவணங்களில் உள்ளதை தெரியவில்லை என்று கூறுகிறேன் என்றால் அதில் எழுத்துக்கள் சிறியதாக உள்ளதால் தெரியவில்லை. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யான எதிர்வாதம் ஏற்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய பாட்டி உயிருடன் இருந்த சமயத்தில் நான் திருப்பூரில் வசித்து வந்தேன் என்றால் சரி. அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னையும், என்னுடைய சகோதரர்களையும் பாட்டி வளர்த்தார் என்றால் தவறு. தாவா அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/–கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.